**O.S.No.18/2023**

வா.சா.1, திருமதி.ராணி
நாள் : 26.09.2024 நேரம் : 11.57 A.M.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1) நான்கு சொத்துக்களுக்கு வழக்கு நடைபெறுகிறது. அதன் விஸ்தீரணம் அளவு எனக்கு தெரியும். சர்வே எண்கள் தெரியும். சர்வே எண்கள் குறிப்பிட்டு கூற முடியுமா என்றால் முடியும், சர்வே எண். 7/1A, 7/1B, 8/1 , 8/2, 8/3, மற்றும் 46/1A. வழக்கு சொத்துக்கள் புஞ்சை தரிசு நிலங்கள் என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்து புல எண்களில் எந்த மாதிரியான மின் கம்பங்கள் இருக்கிறது என்பதை விளக்குவதற்கு நீதிமன்ற ஆணையர் நியமிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். பிராதில் எந்த தேதியில் தாவா இடத்தில் மின் கம்பங்கள் ஊன்றப்பட்டது என்ற விவரங்களை நான் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். மின் கம்பங்கள் தாவா இடத்தில் ஆக்கிரமித்து ஊன்றப்பட்டதாக சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

2) நாங்கள் வழக்கு தாக்கல் செய்வதற்கு 3 வருடங்களுக்கு முன்பாகவே தாவா இடத்தில் மின் கம்பங்கள் ஊன்றப்பட்டது என்று சொன்னால் சரிதான். நான் வழக்கை குறிப்பிட்ட கால கெடுவிற்குள் தாக்கல் செய்யாத காரணத்தினால் வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தமிழ்நாடு மின்சார வாரியத்தை இவ்வழக்கின் தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். தமிழ்நாடு மின்சார வாரியம் இவ்வழக்கின் அவசியமான தரப்பினர் என்றாலும் அவர்களை தரப்பினராக சேர்க்காததால் இவ்வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்திற்கு ஆளாகி உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் எனது அனுமதியின் பெயரில் தான் மின் கம்பங்கள் ஊன்றப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

3) எனது சம்மதத்தின் அடிப்படையில் தான் மின் கம்பங்கள் ஊன்றப்பட்டது என்றாலும் அதனால் தான் நான் தடுக்க எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. மின் கம்பங்கள் ஊன்றப்பட்டதால் எந்த வகையில் எனக்கு பாதிப்பு ஏற்பட்டது என்பதை வழக்குரையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள மின் கம்பங்களினால் எனக்கு எந்த பாதிப்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் மின் கம்பங்கள் ஊன்றப்பட்டதற்கு கம்பத்திற்கு தலா ரூபாய் 7000 வீதம் மொத்தம் ரூ.49,000 பெற்றுக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. நான் பிரதிவாதிகளிடம் இழப்பீடு பெற்று ஆவணங்கள் எழுதி கொடுத்து அதனடிப்படையில் தான் தாவா சொத்தில் மின் கம்பங்கள் ஊன்றப்பட்டது என்றால் சரியல்ல.

4) நான் மின் கம்பங்கள் ஊன்றப்பட்டது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்று சொன்னால் சரிதான். எப்போது புகார் கொடுத்தேன் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு 6 மாதங்களுக்கு முன்பாக புகார் கொடுத்தேன். எனது புகாரை விசாரித்த காவல் அதிகாரிகள் நான் பணம் பெற்றதை உறுதி செய்து கூடுதல் தொகை எதுவும் கேட்க கூடாது என கண்டித்து விசாரணையை முடித்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. பொதுவாக சாதாரணமான மின் கம்பங்களுக்கும் உயர் மின்னழுத்தம் செல்லக்கூடிய கம்பங்களுக்கும் வித்தியாசம் தெரியும். தாவா சொத்தில் ஊன்றப்பட்டுள்ள 7 மின் கம்பங்களும் உயர் மின்னழுத்தம் செல்லக்கூடிய கம்பங்கள் என்று சொன்னால் சரிதான்.

5) மேற்படி மின்கம்பங்களில் 10 மெகாவாட் அளவிற்கு மின்னழுத்தம் செல்லக்கூடியது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் ஊன்றப்பட்டுள்ள மின் கம்பங்கள் வழியாகத்தான் மின்சாரங்கள் செல்கின்றது என்று சொன்னால் சரிதான். பொதுவாக உயர் மின்னழுத்தம் செல்லக்கூடிய மின் கம்பங்களை ஊன்றும்போது அதன் நில உரிமையாளர் தடுக்க இயலாது

என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஒப்பந்தத்தின் அடிப்படையில் தான் மின் உற்பத்தி செய்து மின் கடத்தி வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் செயல் தமிழ்நாடு அரசு மின் உற்பத்தி கழகத்தின் பணியுடன் தொடர்புடையது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் உரிமையியல் தன்மை இல்லை என்பதால் உரிமையியல் நீதிமன்றம் விசாரிப்பதற்கு அதிகார வரம்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் பொது மக்கள் பயன்பாட்டிற்காக செல்கிறது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

6) நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அறிவிப்பு அனுப்பினேன் என்று சொன்னாலும் ஆனால் அவர்களை வழக்கின் தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி கொள்ளை லாபம் ஈட்டுவதாக பிராதில் கூறியிருப்பது தவறு சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு சொத்து எனக்கு மட்டும் தான் பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளிடம் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் பெங்களூரில் உள்ள ஸ்டேரிங் மற்றும் வில்சன்ட் தனியார் நிறுவனத்திடம் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் தான் வழக்கில் சொல்லப்பட்ட மின் கம்பங்கள் ஊன்றப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேல் குறிப்பிட்ட தனியார் நிறுவனம் வழக்கிற்கு அவசியமான தரப்பினர் என்று சொன்னால் சரியல்ல.

7) நான் வழக்கில் குறிப்பிட்டுள்ள மின் கம்பங்கள் வழக்கு சொத்தின் வழியாக பல கி.மீ தூரத்திற்கு ஊன்றப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது எனது சொத்திற்கு மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்தேன். மற்ற நிலத்திற்காரர்கள் மின் கம்பங்கள் ஊன்றியது குறித்து ஆட்சேபனை செய்யவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் குறிப்பிட்டுள்ள வழக்கு மூலமும், பரிகாரமும் தவறு என்று சொன்னால் சரியல்ல. நான் இவ்வழக்கில் சுவாதீன பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்று

சொன்னால் சரிதான். எனது சம்மதத்தின் அடிப்படையில் வழக்கு சொத்தில் மின் கம்பங்கள் ஊன்றப்பட்டது என்று சொன்னாலும், அதற்குரிய இழப்பீடு தொகையை பெற்றுவிட்டேன் என்று சொன்னாலும் சரியல்ல. தற்போது பிரதிவாதியிடமிருந்து அதிகமாக பணம் பெறுவதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

பிராதை தள்ளுபடி செய்ய தீர்ப்பாக வேண்டுகிறேன்.

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.30 P.M

சாட்சியின் கையொப்பம்.